**செய்தி வெளியீடு**

**செய்தி வெளியீடு எண்.07/2022** **நாள் : 23.03.2022**

<u>சென்னைக் குடிநீர் வாரியத்தின் நெற்குன்றம் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் 500 மி.மீ. விட்டமுள்ள குடிநீர் குழாயினை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள 1900 மி.மீ. விட்டமுள்ள பிரதான குழாயுடன் இணைக்கும் பணிகளை 25.03.2022 அன்று காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மேற்கொள்வதால் பகுதி-7, அம்பத்தூர் வார்டு எண்.87 முதல் 93 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோகம் நிறுத்தம் சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்</u>

சென்னைக் குடிநீர் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் நெற்குன்றம் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் 500 மி.மீ. விட்டமுள்ள குடிநீர் குழாயினை பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள 1900 மி.மீ. விட்டமுள்ள பிரதான குழாயுடன் இணைக்கும் பணிகளை 25.03.2022 அன்று காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை மேற்கொள்ளப்படவுள்ளதால், நெற்குன்றம் வி.ஜி.பி. அமுதா மெயின் ரோடில் உள்ள வால்வு மூடப்பட உள்ளதால் பகுதி-7, அம்பத்தூர் வார்டு எண்.87 முதல் 93 வரை உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

இதனால், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், அவசர தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள கீழ்க்காணும் அலுவலரை தொடர்பு கொள்ளவும்.

பகுதிப் பொறியாளர்-7 (அம்பத்தூர்) - கைபேசி எண்.8144930907

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைக் குடிநீர் வாரியம்